கிறோம் என்று பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அதற்கு உதவி செய்கின்ற வகையில் இருக்கக்கூடிய விற்பனை வரி ஏன் கள்ளுக்கு விதிக்கப்படவில்லை? அது மதுவிலக்கு ரத்தைப்பற்றிய அரசின் கொள்கைக்கு முரணு இருக்கிறதல்லவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கள்ளுக்கு ஏன் விற்பனை வரி விலக்கு என்பது கேள்வி. உற்பத்தியாகின்ற எல்லாப் பொருட்களையும் நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதனால் விற்பனை வரி விதிக்கலாம். ஆனால் கள் மரத்திலிருந்து எவ்வளவு இறக்கப்படுகின்றது என்பதைப் பார்த்து விற்பனை வரி விதிப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. ஆகவே, இந்த ஆண்டு அதைப் பரிசிலித்துப் பார்த்துத்தான் விற்பனை வரி விதிக்க வேண்டும்.

Select Committee of Parliament on sales tax

*266 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to give evidence before the Select Committee of Parliament on Sales Tax meeting in this State in October, 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம். ஆனால் 1971 அக்டோபர் மாதத்தில் நடக்கவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பிரேரணைகள் இரகசியமானவைகளாக நாடாளுமன்றத் தேர்வுக் குழு கருதுவதால் விவரங்கள் வெளியிடுவதற்கில்லை.

பல்லடம், அவினாசி வட்டங்கள்

*267 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம், அவினாசி வட்டங்களை நிரந்தர பஞ்சப் பிரதேசமாக அறிவித்து நிவாரண வேலைகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

Deputy Tahsildars in Kanyakumari district.

*268 *Q.*—Thiru R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) whether the list of Regular Deputy Tahsildars in Kanyakumari Revenue Unit for 1968 and 1969 have been drawn up and published; and

(*b*) if not, whether the Government will take early steps for publishing and implementing the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த டிப்டி தாசில்தார் லிஸ்ட் இதுகாறும் காலதாமதப்பட்டிருக்கிற காரணத்தால், பலருடைய கிளெய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ஷன்ஸ் காலாகாலத்தில் போடுவதற்கு தகுந்த சாவகாசம் ஏற்படவில்லை. அதனால் உடனடியாக அவர்களுடைய கிளெய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ஷனை டிஸ்போஸ் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1968-69-ம் ஆண்டு பட்டியல் தயாரானதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. சில பேருக்கு வயது விலக்கு அளிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்கு அந்த பட்டியல் 25—11—71-ல் தான் வந்திருக்கிறது. விரைவில் ஆணை பிறப்பிக்கப் படும். இனிமேல் இவ்விதக் காலதாமதம் ஏற்படக்கூடாது என்று மாவட்ட கலெக்டருக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

Employment Exchanges, Nandanam

* 269 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the office of the Employment Exchanges in Madras City is to be shifted to new building from the present place at Nandanam ; and

(b) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நந்தனத்திலுள்ள வேலை தேடித்தரும் அலுவலகங்கள் விட்டு வசதிப் பிரிவின் பழைய கட்டடத்தில் அமைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டிடம் தற் போது குடிசைமாற்று வாரியத்தின் பணியாவர்களை அமர்த்த தேவைப்படு கிறது.

Survey on employment opportunities in Dharmapuri district

* 270 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any survey is conducted in Dharmapuri district to solve the unemployment problem among the age groups of 12 to 20 years with the help of UNICEF ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது ஒரு முன்னோடி ஆய்வுப் பணியாகும். இது இந்தியாவில் இரண்டு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அவையாவன : மகா ராஷ்டிரத்திலுள்ள ஆமதாபாத், தமிழ்நாட்டிலுள்ள தருமபுரி ஆகியவையாகும். கிராமப்புற இளைஞர்களுக்கு, குறிப்பாக பள்ளியிலிருந்து நின்றுவிட்ட (11 வயதுமுதல் 22 வயது வரையுள்ள தொகுதியினர்) இளைஞர்களுக்கு உள்ள வேலை வாய்ப்புகளைப்பற்றி மதிப்பிடுவதே இந்த ஆய்வுப் பணியின் நோக்க மாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the month of September an Officer of the Central Government in connection with the UNICEF came to Hosur from Delhi. He remained for three days at Hosur and collected statistics with regard to school